யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | நாடகமும் அரங்கியலும் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

## பகுதி - I

1) நாடகம் ஒன்றில் உடல் அசைவுகள் மூலம் கருத்தைப் புலப்படுத்தும் அபிநயம்?
1) சாத்வீக அபிநயம் 2) வார்ச்சிக அபிநயம் 3) ஆகார்ய அபிநயம்
4) ஆங்கீக அபிநயம் 5) மேற்கூறிய யாவும் (............)

2) அறிவு, கலை, நுட்பம், விஞ்ஞானம் எதுவானாலும் அது நாடகத்தில் அடங்கவில்லையேல் அதற்கு அப்பெயரை வைப்பதில் அர்த்தமில்லை என்ற கருத்தைக் கூறியவர்
1) ஜோர்ச் தொம்சன் 2) நெல்சன் குட்மன் 3) பரதமுனிவர்
4) அரிஸ்ரோட்டில் 5) வெறினிக்மன் (............)

3) சமஸ்கிருதமரபில் 'லோகதர்மி' எனக் குறிப்பிடப்படுவது
1) குறியீட்டு நாடகம் 2) யதார்த்தப் பண்பு நாடகம் 3) சடத்துவமரபு
4) மோடி நாடகம் 5) அபத்த நாடகம் (............)

4) எட்டுவகை 'ரஸம்' மெய்ப்பாடுகளைக் கூறும் தமிழ் இலக்கண நூல்
1) சிலப்பதிகாரம் 2) தொல்காப்பியம் 3) நாட்டியசாஸ்திரம்
4) மாணிக்கமாலை 5) மதங்கசூளாமணி (............)

5) நாட்டியசாஸ்திரத்தில் குறிப்பிடாத ரஸம்
1) சாந்தம் 2) பயம் 3) அன்பு
4) காதல் 5) வீரம் (............)

6) நிருத்தியம் எனப்படுவது
1) ஆங்கீகம் வாச்சிகம் இணைந்தது 2) வாச்சீகம் சாத்வீகம் இணைந்தது
3) சாத்வீகம் வாச்சீகம் இணைந்தது 4) ஆங்கீகம் சாத்வீகம் இணைந்தது
5) சாத்வீகம் ஆகார்யம் இணைந்தது (............)

7) நாடக பாடத்தைப் பலபொருள் புலப்படும் வகையில் வியாக்கியானிக்கும் சுதந்திரம் கொண்டவர்
1) நாடகஆசிரியர் 2) நெறியாளர் 3) தயாரிப்பாளர்
4) ஒளிஅமைப்பாளர் 5) இசைஅமைப்பாளர் (............)

8) கீழைத்தேயத்திலும் மேலைத்தேயத்திலும் ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட அரங்கவெளி எத்தகைய வடிவம் கொண்டது?
1) நீள்சதுரம் 2) அரைவட்டம் 3) வட்டம்
4) சதுரம் 5) முக்கோணம் (............)

9) தனிப்பட்ட வகையில் குடும்பக் கஷ்டங்களை நீக்குவதற்காகவும் கிராமத்திற்கு/ ஊருக்கு/ நாட்டுக்கு நன்மைநாடி சிங்கள மக்கள் செய்யும் சடங்கானது
1) ரட்டயக்கும 2) கொஹொம்பகங்காரிய 3) தெவொல்மடுவ
4) சன்னியக்கும 5) தஹட்டசன்னிய (............)

10) உடக்குப்பாஸ் நாடகத்தில் மக்கள் வேடம் தாங்கும் பாத்திரம்
1) இயேசு 2) பிலாத்து 3) போர்வீரர்
4) பரிசேயர் 5) அன்னாஸ்கைப்பாஸ் (............)


agaram.lk
Scanned with CamScanner

11) கப்புக்கனார் எனப்படுபவர்
1) வேட்டைத் திருவிழாவின் பூசாரி
2) குளுத்திச் சடங்கின் பூசாரி
3) மாணம்புச் சடங்கின் பூசாரி
4) பாண்டவர் வனவாசச் சடங்கின் பூசாரி
5) சூரன்போர் சடங்கின் பூசாரி

12) தொவில் ஆட்டம் எந்த நேரத்தில் ஆடப்படுகின்றது?
1) பகலில்
2) இரவில் மட்டும்
3) அதிகாலையில்
4) மாலையில்
5) விரும்பியநேரங்களில்

13) கொற்றவையாக வேடம் இடும் சிலப்பதிகார அரங்கு எது?
1) ஆய்ச்சியர்குரவை
2) வேட்டுவவரி
3) கானல்வரி
4) வெறியாட்டு
5) குன்றக்குரவை

14) சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்ற "பார்ஸி வழிவந்த" இசை நாடகம்
1) சொக்கரி
2) நார்த்தி
3) கோலம்
4) நாடகம
5) ஸ்பெஷல் நாடகம்

15) 'தக அட்ட சன்னிய' நிகழ்த்தப்படுவதன் பிரதான நோக்கம்
1) பயிர் விளைச்சல், வளம் வேண்டுதல்
2) நோய் தீர்த்தல்
3) செழிப்பு, சௌபாக்கியம் வேண்டுதல்
4) குழந்தை வரம் வேண்டுதல்
5) நாட்டுப் பிரச்சினை தீரவேண்டி

16) ஏழு மலட்டு ராணிகளை பிரதான பாத்திரமாகக் கொண்ட சிங்களச் சடங்கு
1) சன்னியக்கும
2) ரட்டயக்கும
3) கோலம
4) தொவில்
5) பகன்மடுவ

17) பெரும்பாலும் வைகாசி மாதத்தில் இடம்பெறும் நிகழ்வு
1) மாணம்பூத் திருவிழா
2) கந்தசஷ்டிச் சூரன்போர்
3) பஞ்சபாண்டவர் வனவாசச் சடங்கு
4) காமன் கூத்து
5) கண்ணகிஅம்மன் குளுத்திச் சடங்கு

agaram.lk

18) "கதாசிஸ்"என்பது
1) பாத்திரப்பண்பு
2) அவலத்தவறு
3) பெருங்காட்சி
4) உணர்ச்சிவெளிக் கொணர்கை
5) ஒருநாடகவகை

19) அங்கதச் சுவையுடைய சிங்கள நாடக வடிவம்
1) கோலம்
2) தொவில்
3) சொக்கரி
4) நாடகம
5) நூர்த்தி

20) 'சைக்குளோராமா'என்பதன் மறுபெயர்
1) முன்திரை
2) வான்திரை
3) பக்கத்திரை
4) குறுக்குத்திரை
5) மேலிழுக்கும் திரை

21) 'அன்ரிகனி' நாடகத்தில் வரும் தைரீசியஸ் ஒரு
1) காவலாளி பாத்திரமாகும்
2) செய்தியாளன் பாத்திரமாகும்
3) தீர்க்கதரிசி பாத்திரமாகும்
4) தூதுவன் பாத்திரமாகும்
5) ஒற்றன் பாத்திரமாகும்

22) பின்வருவனவற்றில் அரங்கின் 'அருபமூலகமாக' கொள்ளப்படுவது
1) நாடக எழுத்துரு
2) இசை
3) நடிகன்
4) ஒலி
5) ஒளி

23) 'அபசுரம்' நாடகத்தில் சமயவாதியாக அடையாளப்படுத்தும் பாத்திரம்
1) அருளர்
2) தியாகர்
3) பொதுவர்
4) சிவாயர்
5) புறப்பசர்



Scanned with CamScanner

24) 'அன்ரிக்கனி' நாடகத்தை இ. முருகையன் தமிழில் மொழிபெயர்த்து இட்டபெயர்
1) வீரப் பெண் 2) சர்வபங்கயம் 3) சாதுரியக்கரி
4) கர்வாங்கி 5) கர்வபங்கம் (............)

25) கிரேக்க அவலச் சுவையின் பிரதான இலக்கண உறுப்புக்கள் முறையே
1) கதைப்பின்னல், பாத்திரம், சிந்தனை, சொற்றிறன், காட்சி, இசை
2) கதைப்பின்னல், சிந்தனை, பாத்திரம், சொற்றிறன், காட்சி, இசை
3) கதைப்பின்னல், சொற்றிறன், சிந்தனை, பாத்திரம், காட்சி, இசை
4) கதைப்பின்னல், காட்சி, சொற்றிறன், பாத்திரம், சிந்தனை, இசை
5) கதைப்பின்னல், காட்சி, சொற்றிறன், சிந்தனை, பாத்திரம், இசை (............)

26) நடிகர் நீண்டவசனம் பேசுவதற்கு காற்றைச் சேமித்துவைக்க உதவும் பகுதி
1) உச்சந்தலையாகும் 2) நாசி ஆகும் 3) நெஞ்சு ஆகும்
4) தொண்டை ஆகும் 5) அடிவயிறு ஆகும் (............)

27) படச்சட்ட அரங்கின் தளங்களில் அதிமுக்கிய பகுதியாகக் கொள்ளப்படுவது
1) மத்திய இடம் 2) பின்மந்தி 3) முன்மந்தி
4) முன் வலது 5) மத்தியமந்தி (............)

28) நடிகரைத் தயார்ப்படுத்துவதற்காக குரற்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் அரங்க விளையாட்டு
1) குருட்டு ஆட்டோ 2) ஆடும் வீடும் 3) பழக்கலவை
4) பொன்முட்டை 5) கோழி கோட்டான் (............)

29) அரங்கில் ஒளிவிதானிப்புச் செய்யும் போது நடிகர் அன்றேல் பொருள் ஒன்றைக் குறிப்பாகக் காட்டஉதவுவது
1) கீற்றொளி ஆகும். 2) வர்ணச் சக்கரம் ஆகும். 3) விரிகைச் சக்கரமாகும்.
4) பொட்டொளி ஆகும். 5) பெருக்கொளி ஆகும் (............)

30) நாடகத்தில் காட்சிஅலங்காரம் என்பது
1) மிகஆடம்பரமாக அமைதல் வேண்டும்.
2) மேடையில் எப்பொழுதும் பின்னுக்கே இருத்தல் வேண்டும்.
3) அளிக்கையின் பிரதானபாணியை முன்னிறுத்திக் காட்ட வேண்டும்.
4) எப்போதும் எமது வாழ்வை ஒத்ததாகக் காணப்படல் வேண்டும்.
5) காட்சிகள் தத்துருபமாக இருத்தல் வேண்டும். (............)

31) உலக நாடக தினம் கொண்டாடப்படுவது
1) ஜனவரி 14 2) மார்ச் 8 3) மார்ச் 27
4) ஏப்ரல் 23 5) ஏப்ரல் 28 (............)

32) நடிகர் பிரதானமாகக் கொண்டிருக்கவேண்டியது
1) பாடும் திறனாகும் 2) ஆடும் திறனாகும் 3) உள்ளார்ந்தநடிப்பாற்றலாகும்
4) அழகான உடலாகும் 5) சபைக்கூச்சமற்றமனோபாங்காகும். (............)

33) வானொலி நாடகத்திற்கான மேடை
1) ஒலிப்பதிவு செய்யும் கலையகமாகும் 2) நடிகர்கள் நின்று நடிக்கும் இடமாகும்
3) காற்றுவெளி ஆகும் 4) கேட்போரின் மனமாகும்
5) நடிப்போரின் மனமாகும் (............)

34) சங்ககாலத்தில் யாழ் என்னும் வாத்தியத்தை வாசித்த கூத்தர் குழாம்
1) கோடியர் 2) விறலியர் 3) பொருநர்
4) பாணர் 5) வைரியர் (............)

35) மாதவி ஆடிய பதினொரு ஆடல்களில் முருகன் சூரபத்மனை கொன்றகதையைக் கருவாகக் கொண்டது
1) மல்லாடல் 2) மரக்கால் ஆடல் 3) துடிஆடல்
4) பேடிஆடல் 5) பாண்டரங்கம் (............)


agaram.lk

Scanned with CamScanner

- பின்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டு 36 - 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.



அ



ஆ



இ



ஈ



உ

36) படம் 'அ' இல் காணப்படும் நாடகமரபு
   1) கோலம்  2) சொக்கரி  3) நூர்த்தி
   4) நாடகம  5) சன் னியக்கும (..........)

37) படம் 'ஆ' இல் காணப்படும் படம் எந்தச் சடங்கிற்குரிய அரங்கு
   1) சூரன்போர்  2) அரிச்சுணன் தபசு  3) மகிடிக் கூத்து
   4) வதனமார்ச் சடங்கு  5) பாண்டவர் வனவாசம் (..........)

38) படம் 'இ' இல் காணப்படும் வேட முகமுள்ள பாத்திரம் எந்தச் சடங்கிற்கு உரியது
   1) றட்டயக்குக  2) நிட்டியாக் கய  3) சன்னியக்கும
   4) பாகன்மடுவ  5) தொல்மடுவ (..........)

39) படம் 'ஈ' இல் காணப்படும் ஆடல் மரபு
   1) ஒபேரா  2) கண்டியநடனம்  3) பரதநாட்டியம்
   4) பலே  5) கதக் (..........)

40) படம் 'உ' இல் காணப்படும் ரசம்
   1) பயானகம்  2) கருணா  3) சிருங்காசம்
   4) ஹஸ்யம்  5) பீபட்சம் (..........)

## பகுதி - II

### பிரிவு - A

1.
   1. நுண்கலை என்றால் என்ன? அவை எவை? (4 புள்ளிகள்)
   2. ஆற்றுகைக் கலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)
   3. நுண்கலையில் நின்று நாடகம் வேறுபடும் விதத்தைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

2.
   1. நான்கு வகைச் சித்தரிப்புக்களையும் கூறி விளக்குக. (4 புள்ளிகள்)
   2. இந்திய அரங்கில் பேசப்படும் இரு வகைத் தர்மிகளைக் கூறி விளக்குக. (5 புள்ளிகள்)
   3. நிருத்த நிருத்திய நாட்டிய என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைக் கூறி விளக்குக. (6 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் விரும்பிய மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1. இசை நாடகம்  2. பாஸ்கு நாடகம்  3. வேட்டைத் திருவிழா
   4. காமன் கூத்து  5. பாண்டவர் வனவாசம் (3 x 5 = 15 புள்ளிகள்)

### பிரிவு - B

4.
   1. அபசுரம் எவ்வகைச் சாயல் கொண்ட நாடகம்? அதன் ஆசிரியர் பெயர் என்ன? (2 புள்ளிகள்)
   2. அபசுரம் நாடகத்தில் வரும் பாத்திரங்களைப் பட்டியற்படுத்துக. (4 புள்ளிகள்)
   3. அபசுரம் நாடகத்தில் வரும் மூன்று பாத்திரங்களின் பண்புகளை விளக்குக. (9 புள்ளிகள்)

5.
   1. சகுந்தலம் நாடகத்தின் முழுப் பெயர் என்ன? அதன் ஆசிரியர் யார்? (2 புள்ளிகள்)
   2. சகுந்தலம் நாடகத்தில் வரும் பாத்திரங்களைப் பட்டியற்படுத்துக. (4 புள்ளிகள்)
   3. சகுந்தலம் நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்கள் மூன்றின் பண்பைக் கூறி வாழ்க்கை அனுபவங்களைக் குறிப்பிடுக. (9 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் விரும்பிய மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1. வேட உடை ஒப்பனை  2. அரங்க ஒளியூட்டுகை  3. மேடைமுகாமையாளர்
   4. காட்சிவிதானிப்பு  5. நெறியாளர் (3 x 5 = 15 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

FWC

| தரம் :- 12 (2017) | புள்ளித்திட்டம் | நாடகமும் அரங்கியலும் |
|---|---|---|

## பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 1. 4 | 11. 2 | 21. 3 | 31. 3 |
| 2. 3 | 12. 2 | 22. 1 | 32. 3 |
| 3. 2 | 13. 2 | 23. 4 | 33. 4 |
| 4. 2 | 14. 2 | 24. 5 | 34. 4 |
| 5. 1 | 15. 2 | 25. 1 | 35. 3 |
| 6. 4 | 16. 2 | 26. 5 | 36. 4 |
| 7. 2 | 17. 5 | 27. 5 | 37. 2 |
| 8. 3 | 18. 4 | 28. 5 | 38. 3 |
| 9. 2 | 19. 3 | 29. 4 | 39. 4 |
| 10. 3 | 20. 2 | 30. 3 | 40. 4 |

## பகுதி - II

## பிரிவு - A

agaram.lk

1.

1) அழகுணர்ச்சியுடையதாகவும், மெருகூட்டப்பட்டதாகவும், நுணுக்கமானதாகவும், நேர்த்தியானதாகவும் இருக்கின்ற கலைகள் நுண்கலைகள் எனப்படும். நடனம், நாடகம், இலக்கியம், இசை, கட்டடம், சிற்பம், ஓவியம்

(4 புள்ளி)

2) போலச்செய்வது, மோதுகையைச் சித்தரிப்பது, கணப் பிரசன்னமாவது, முரணைச் சித்திரிப்பது, நிகழ்த்துகலை, செய்துகாட்டுவது, ஊடாட்டமுடையது, பொய்மையில் மெய்மை உடையது, தொடர்பாடல், எதிர்வினையைத் தூண்டுவது

(4 பண்புகள் எழுதியிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும் அவற்றுடன் 3 பண்புகள் விளக்கியிருப்பின் 3 புள்ளிகள் வழங்கவும்)

(5 புள்ளி)

3) இசைநாடகம், நடனம், சினிமா போன்றவற்றுக்கிடையிலான பொருத்தமான விளக்கம் ஒவ்வொன்றுக்கு 2 கூறியிருந்தால் புள்ளிகளை வழங்கவும்.

(6 புள்ளி)

2.

1) உடல்வழிச் சித்தரிப்பு, குரல் வழிச் சித்தரிப்பு, உணர்ச்சிவழிச் சித்தரிப்பு, காண்பியவழிச் சித்தரிப்பு (மேற்குறித்த நான்கையும் தனித்து சுருக்கி விளக்குதல் வேண்டும்.)

(4 புள்ளி)

2) நாட்டியசாஸ்திரத்தில் குறிப்பிடப்படும் இரு வகை நடிப்பு முறைகள் தர்மிகள் எனப்படும்.

| | **லோகதர்மி** | **நாட்டயதர்மி** |
|---|---|---|
| 1. | இயல்பான கதை | இயல்பற்ற கதை |
| 2. | தொல்காப்பியம் உலகியல் வழக்கு என்கிறது. | தொல்காப்பியம் நாடக வழக்கு என்கிறது |
| 3. | பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது. | மோடியுற்ற அங்க அசைவுகளைக் கொண்டது |
| 4. | இயல்பான அபிநயங்களைக் கொண்டது. | ஒரு பாத்திரத்தைப் பலர் ஏற்று நடிப்பர். |
| 5. | போலித்தன்மை அற்றது. | உரையாடல் பாடல் லயத்தில் அமைத |

(5 புள்ளி)



Scanned with CamScanner

3) நிருத்த : கருத்துப் புலப்படுத்தப்படாத பாத்திர சித்தரிப்பு இல்லாத தூய நடனம் ...
அமைவான உடல் அசைவைக் கொண்டது.

நிருத்திய : பாவ வெளிப்பாட்டுடன் பாத்திரச் சித்தரிப்புக் கொண்ட கருத்துப் புலப்படு...
கால்கள், கண்கள் மூலம் பாவம் வெளிப்படும்.

நாட்டிய : ஒரு முழுமையான நாடகத்தைக் குறிக்கும் நால்வகை அபிநய...
பயன்பாட்டைக் கொண்டது. கதைக்குரிய பாத்திரங்களைக் கொண்டது.

வேறுபாடு : நிருத்தம் - தூயநடனம், நிருத்தியம் - பாவ வெளிப்பாடு, நாட்டியம் - ...
வெளிப்பாடு என்பவற்றைக் கொண்டு விளக்குதல் வேண்டும்.

3.

1) இசை நாடகம்

- பாடலே முக்கியமாக இடம்பெறும், பல்வேறு நாடகப்பாடற் பாணிகள் பயன்படுத்த...
- இதை கதை அம்சமாகப் புராண, இதிகாச, தெய்வக் கதைகளும் நாட்டார் கதை... அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
- இலங்கைத் தமிழ் மக்களிடத்தில் இது இசைநாடகம், ஸ்பெசல் நாடகம், ... கொட்டகைக் கூத்து என அழைத்தனர்.
- பாடலின் பொருளை மேம்படுத்த உடலசைவுகள் பயன்படுத்தப்பட்டன. ... இதனை 'நூர்த்தி' என அழைப்பர்.

2) பாஸ்கு நாடகம்

- கத்தோலிக்க மக்களின் தவக்கால வழிபாட்டுடன் தொடர்புபட்ட சடங்கு.
- இலங்கையின் பல இடங்களில் குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நிகழ்த்தப்படுகின்றது.
- இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய விடயங்கள் சித்திரிக்... காட்டப்படுகின்றன.
- பாஸ்கு நாடகம் திறந்த வெளியான அரங்க வெளியில் பெருங்காட்சியுடன் நிகழ்த்திக் காட்டப்பெறும்.
- பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்பெறும் மரபும், நடிக்கும் மரபும் உண்டு.

3) வேட்டைத் திருவிழா

- வேட்டைத் திருவிழாவின் நிகழ்த்துகை பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும். ஆலய... திருவிழாக்களில் இடம்பெறும்.
- கதவடித்துப் பாடுதல் எனும் சம்பவம் காணப்படல்.
- ஆலயத்தை அண்டிய பகுதியில் வயல்வெளியாகப் பாவனை செய்து அரங்காக்... நிகழ்த்துவர்.
- பயிர் பச்சைகளை அழிக்கும் மிருகங்களை வேட்டையாடுதலே பிரதான செயற்பாடாகும்.
- பிரதான பாத்திரங்களுக்கிடையில் நாடகப் பாங்கான உரையாடல் ஆடல், பாட... காணப்படும்.

4) காமன் கூத்து

- மலையக மக்களின் நாடக வடிவங்களில் ஒன்று.
- கந்தபுராணக் கதையுடன் சம்பந்தப்பட்டு சிவன் மன்மதனை எரித்த கதை நிகழ்த்திக் காட்டப்படும்.
- இதன் பிரதான வாத்தியயம் தப்பு ஆகும். அரங்கை காமன் பொட்டல் என அழைப்பர்.
- இதன் அண்ணாவியாரை காமன்டி வாத்தியார், காமன் மாஸ்ரர் என அழைப்பர்.
- மன்மதன், ரதி, சிவன், இந்திரன், பிரம்மா, தூதன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களாகும்.



agaram.lk
Scanned with CamScanner

5) பாண்டவர் வனவாசம்

- கிழக்கு மாகாணத்தில் கல்முனை அருகே பட்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தில் 18 நாள் நடைபெறுவதில் 16ம் நாள் இடம்பெறும்.
- பாரதக் கதையை மீள்நிகழ்த்திக் காட்டும் சடங்காகும்.
- பாண்டவர் வேடமிட்டு வனவாசம் செல்வர்.
- வாள்மாற்றும் சந்தியில் வாளை வீமன் தருமனிடம் பெறுவார்.
- சிலாபம், பழுகாமம் போன்ற இடங்களில் அம்மன் ஆலயங்களில் நிகழ்த்தப்படும்.
- பஞ்சபாண்டவர் நேர்த்தியை நிறைவேற்ற மக்கள் இதில் இணைகின்றனர்.

## பிரிவு - B

(3 x 5 = 15 புள்ளிகள்)

1) அபத்தசாயல் கொண்ட நாடகம், நா. சுந்தரலிங்கம்

2) அருளர், தியாகர், சிவாயர், பொதுவர், புறெப்பசர், பிரச்சினை (2 புள்ளி)

3) பொதுவர் : பொதுமகன் ஒருவரைக் குறிக்கும் வகை மாதிரியில் பாத்திரம் எவ்வாறு ஏமாற்றப்படுகிறது என்பதும் அவருக்குப் பிரச்சினையாக அமையும் விடயமும் அதனைத் தீர்க்க மற்றவர் உதவியை எதிர்பார்ப்பவராக ஒரு இயலாதவராக மனச்சோர்வுடையவராக காணப்படுகின்றார். (4 புள்ளி)

புரொபசர் : அதிகம் படித்த விஞ்ஞானப் பேராசிரியரைக் குறிக்கும் வகை மாதிரிப் பாத்திரம் எதனையும் ஆய்வு ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் சிந்திக்கும் பாத்திரம்.

சிவாயர் : கடவுளின் பெயரால் மக்களை ஏமாற்றும் வகை மாதிரிப் பாத்திரம் அவன் இன்றி அணுவும் அசையாது மூடநம்பிக்கையை வளர்ப்பவராக படைக்கப்பட்டுள்ளார்.

அருளாளர், தியாகர் : வாய்ச்சவடல்காரர் வாய் இருந்தால் வங்காளம் போய் வரலாம் போன்ற பாத்திரம் பேசிப்பேசியே மற்றவரை நோகடிக்கும் பாத்திரம்..

(9 புள்ளி)

5.

1) அபிக்ஞானசகுந்தலம், காளிதாசன்

2) துஷியந்தன், சகுந்தலை, துருவாசர், கண்ணுவர், அனசூயை, பிரியம்வதை (5 பாத்திரங்களுக்கு மேல் எழுதியிருப்பின் 04 புள்ளி, 3 பாத்திரங்களுக்கு மேல் எழுதியிருப்பின் 03 புள்ளி)

3) துஷியந்தன் : மன்னன், பிள்ளைகளிடத்தில் விருப்பம் உள்ளவன். வேட்டையாடுவதில் வல்லவர். இறைபக்தி உடையவன். மற்றவரை மதிக்கும் குணம் உள்ளவன், காதலில் பால் நாட்டமுடையவன். அழகானவன். நாட்டு மக்களின் நலன் பேணுபவன்.

சகுந்தலை : அழகானவள். தன்னைச் சார்ந்தோரில் மிகுந்த விருப்பமுடையவள். இயற்கையை நேசிக்கும் அன்புடையவள். பறவை, மிருகங்களிடத்தில் அன்புடையவள். சூழலுக்கு ஏற்ப சமாளிப்பவள்.

கண்ணுவர் : மகளிடம் மிகுந்த அன்புடையவர். மகளின் விருப்பத்தை மதிப்பவர்.

துருவாசர் : முற்கோபக்காரர்

அனசூயை, பிரியம் வதை : தம் தலைவி மீது அளவில்லா அன்புடையவர்கள். தலைவியின் நல்வாழ்வில் விருப்புக் கொண்டவர்கள் சகுந்தலையைத் தன் தலைவனிடம் சேர்த்து சந்தோஷமாக அவள் வாழ வேண்டும் என்ற விருப்புமுடையவர்கள்.

(2 + 4 + 9 =15 புள்ளிகள்)



agaram.lk

Scanned with CamScanner

6. கீழ்வருவனவற்றுள் விரும்பிய மூன்றிற்கு சிறுகுறிப்புஎழுதுக.

1) வேட உடை ஒப்பனை

- நாடகத்தில் புறத்தோற்றப்பாட்டைக் காட்ட உதவுகின்றது.
- பாத்திரத்தின் வயது, பால், சமூக அந்தஸ்து என்பவற்றை மையப்படுத்தி செய்தல் வேண்டும்.
- நாடகத்தின் காலம், பாணி, கலாச்சாரம் என்பவற்றை கவனித்தல்.
- இலகுவானதும், ஒளிமயமானதுமாக இருத்தல் வேண்டும்.

2) அரங்க ஒளியூட்டுகை

- அரங்கின் இருளை நீக்க தீப்பந்தம், ஒளிவிளக்கு போன்றவை பயன்படுத்தப்பட்டன.
- நாடகத்தின் காட்சி, காலம், உணர்வு என்பவற்றை வெளிப்படுத்தப் பயன்படுகின்றது.
- நாடகத்தின் ஒட்டுமொத்த வெற்றிக்கு துணைபுரிகின்றது.
- வேடஉடை, ஒப்பனை, காட்சிப்பின்னணி என்பவற்றை வெளிப்படுத்த உதவுகிறது.

3) மேடைமுகாமையாளர்

- நாடக நெறியாளர் தவிர அரங்கின் சகல பணிகளுக்கும் வெறுப்பாகச் செயற்படுவர்.
- மேடைமுகாமையாளரை மேடைக்கட்டுப்பாட்டாளர் எனவும் அழைப்பர்.
- இவர் நெறியாளரது துணையாளராகத் தொழிற்படுவார்.
- தயாரிப்பின் போது காட்சி ஒழுங்குபடுத்தல் நடிகர் ஏனைய துணைக்கலைஞர்களை ஒழுங்கமைத்தல்.
- வெற்றிகரமான நாடகம் இவரின் பணியால் வெற்றியடையும்.

4) காட்சிவிதானிப்பு

- நாடகத்தின் காட்சியை அர்த்தமுடையதாக்குவது.
- நாடகத்தின் கருப்பொருள் காட்சி மூலம் வெளிப்படுத்தப்படும். நடிகருக்குப் பார்வையாளருக்கு உறுதுணையாக அமையும்.
- நாடகத்தின் பாணி / மோடியை வெளிப்படுத்தும்.
- நாடக களத்தை வரையறுத்து நடிப்பை மெருகுபடுத்தும்.
- நாடக சூழல், காலம், சமூகப் பொருளாதாரம் வெளிப்படும்.

5) நெறியாளர்

- நாடக பாடத்தை பல்வேறு கோணங்களில் வியாக்கியானம் செய்பவர்.
- அரங்கவெளியில் உயிரோட்டமான மீள்படைப்பாக்கமே செய்பவர்.
- நாடகம் பற்றி ஏனைய துணைக்கலைஞருடன் கலந்துரையாடுவார்.
- பாத்திரத் தெரிவை மேற்கொண்டு அரங்கு சார்ந்த பயிற்சிகளை வழங்குவார்.
- மனிதநேயத்துடன் ஒத்திகையின்போதும் பயிற்சியின்போது தொழிற்பட வேண்டும்.

(இவ்வாறு பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருந்தால் புள்ளிகள் வழங்கலாம்)

agaram.lk



Scanned with CamScanner